தலைவருடைய அதிகார வரம்பில் குறுக்கிடாது. அவ்வாறு பேரவைத் தலைவருடைய அதிகாரத்தில் குறுக்கிடாதபடிதான் இந்த உத்தரவை இட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தப் பேரவையின் உரிமை எதுவும் எழவில்லை என்று தீர்ப்புக் கூறுகிறேன்.

வேறு இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இன்றைக்கு நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால் நாளை மறு நாள் இவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

5. அறிவிப்பு.

'மீலாடி நபி' யை முன்னிட்டு அவைக்கு விடுமுறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 21—6—1967ம் நாள் மீலாடி நபி பண்டிகையை முன்னிட்டு அரசு பொதுவிடுமுறையாக அறிவித்திருக்கிறபடியால், அன்று பேரவைக் கூட்டம் நடைபெறாது. ஆகவே, வரவு செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம் 27—6—1967-ம் தேதி தொடர்ந்து நடைபெறும்.

6. 1967-68-ம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொதுவிவாதம் (தொடர்ச்சி).

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திலே ஒருசில கருத்துக்களை இந்த மன்றத்தின் ஆழ்ந்த கவனத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதல் முதலிலே இன்று இருக்கிற விலைவாசிப் பிரச்சினையைப் பற்றி ஒருசில வார்த்தைகள் கூறுவது எனது கடமையாகக் கருதி அதைப் பற்றிக் கூறுவதற்கு முற்படுகிறேன். விலைவாசி இன்று அபரிமிதமாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்தியப் புள்ளி விவரங்களைச் சுட்டிக்காட்டி 24 புள்ளிக்கு மேலாக உணவுப் பண்டங்களின் விலை உயர்ந்திருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள்—அவர்களுடைய பட்ஜெட் உரையிலே. ஆனால், உணவு அமைச்சர் உயர்திரு மதியழகன் அவர்கள், விலைவாசியெல்லாம் இறங்குமுகமாக இருக்கின்றன என்பதற்கு மேற்கோளாக ஒருசில புள்ளி விவரங்களை, கோயம்புத்தூர் நகரத்தைப் பொருத்த புள்ளி விவரங்களை, இந்தச் சபையின் முன்னால் வைத்தார்கள். அதிலே கூறப்பட்டிருக்கிற பண்டங்கள் எல்லாம், கூறியிருக்கிற விலைகள் எல்லாம் முன்பு அவர்கள் எதிர்க்கட்சித் தரப்பில் இருந்த போது அகில இந்திய ரேடியோவில் கூறப்படுகின்ற விலைக்கு ஒப்பாக இருக்கும் என்று மட்டும்தான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உண்மையிலேயே, உணவு தானியங்களின் விலைவாசி வெளி மார்க்கெட்டுக்களில் குறைந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அரசாங்கத் தரப்பிலிருந்து ரூபாய்க்கு ஒரு படி அரிசி கோவை நகரத்திலும், சென்னை மாநகரத்திலும் கொடுத்து வருவது வரவேற்கத்தக்கதுதான். அதைப் பாராட்டுகிறோம். ஆனால், 31 லட்சம் மக்களுக்கு மட்டும் கொடுத்தால் போதாது. இன்னும் வறுமையினால் வாடிக் கொண்டிருக்கின்ற பல கோடிக்